# இஸ்லாமியப் பெருமக்களின் காவல் தெய்வம் - முதல்வர் மு.க. ஸ்டாலின்!

## கும்பகோணம் மாநாட்டு அறிவிப்புகளால் இஸ்லாமியர்கள் வாழ்வில் வசந்தம்: நெகிழ்ச்சியுடன் நன்றி தெரிவிக்கும் அமைச்சர் சா.மு. நாசர்!

“சிறுபான்மையின மக்களின் உரிமைகளை மீட்டெடுப்பதிலும், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதிலும் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழும் நமது ‘திராவிட மாடல்’ அரசின் நாயகர், முதலமைச்சர் அவர்களுக்கு இஸ்லாமியச் சமுதாயத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்” என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள விரிவான அறிக்கை வருமாறு:

**வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய கும்பகோணம் மாநாடு!**

நேற்று (28.01.2026) கும்பகோணத்தில் நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக்-இன் ‘மஹல்லா ஜமாஅத் ஒருங்கிணைப்பு மாநில மாநாடு’ தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு மைல்கல். பல்லாயிரக்கணக்கான இஸ்லாமியப் பெருமக்கள் திரண்டிருந்த அந்த எழுச்சிமிகு மேடையில், நமது முதல்வர் ஆற்றிய உரை வெறும் பேச்சல்ல; அது இந்தச் சமூகத்தின் மீதான அவரது தீராத அன்பின் வெளிப்பாடு.

“**நான் உங்களில் ஒருவன்**” என்று கூறி, இஸ்லாமியச் சமூகத்தின் கோரிக்கைகளை அவர்கள் கேட்பதற்கு முன்னமே உணர்ந்து நிறைவேற்றும் ஒரு முதல்வரைப் பெற தமிழகம் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

**கோரிக்கைகளை முந்திக்கொண்ட அறிவிப்புகள்:**

முதலமைச்சர் அவர்கள் கும்பகோணம் மாநாட்டில் அறிவித்த ஐந்து முக்கிய அறிவிப்புகளும் இஸ்லாமியப் பெருமக்களின் நீண்டகாலத் தேவைகளைத் தீர்த்து வைப்பவை:

1. **ஓய்வூதிய உயர்வு:** உலமாக்களுக்கான ஓய்வூதியத்தை 3,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியத்தை 1,500 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கியிருப்பது, இறைப்பணி செய்வோரின் முதுமைக்காலத்திற்குப் பெரும் அரணாகத் திகழும்.
2. **இருசக்கர வாகன மானியம்:** உலமாக்கள் நலவாரிய உறுப்பினர்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க வழங்கப்படும் மானியத் தொகையை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கியிருப்பது, அவர்களின் சமூகப் பணிகளை எளிதாக்கும் உன்னதத் திட்டம்.
3. **புதிய வக்பு தீர்ப்பாயம்:** சென்னை மற்றும் மதுரையைத் தொடர்ந்து, கொங்கு மண்டல மக்களின் நலன் கருதி கோயம்புத்தூரில் மூன்றாவது வக்பு தீர்ப்பாயம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு, நீதி நிர்வாகத்தை மக்கள் இருப்பிடத்திற்கே கொண்டு செல்லும் முயற்சியாகும்.
4. **கபரிஸ்தான் நிலங்கள்:** அடக்கத்தலங்கள் (கபரிஸ்தான்) இல்லாத இடங்களில் அரசு நிலங்களைக் கண்டறிந்து மாநகராட்சிகள் மூலம் அமைத்துக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பு, இஸ்லாமிய மக்களின் உணர்வுகளுக்கு அளிக்கப்பட்ட உச்சகட்ட மதிப்பீடு.
5. **உருது ஆசிரியர் பணி நியமனம்:** காலிப் பணியிடங்களை நிரப்புவதன் மூலம் உருது மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாக்க முதல்வர் காட்டும் ஆர்வம் போற்றுதலுக்குரியது.

**ஒரு நூற்றாண்டுக் கால நட்பு:**
**அண்ணாவும், கலைஞரும், காயிதே மில்லத்தும்!**

திராவிட இயக்கத்திற்கும் இஸ்லாமியச் சமுதாயத்திற்கும் இடையிலான உறவு என்பது அரசியல் கடந்தது; அது இரத்தமும் சதையுமான உறவு.

திருவாரூரில் நடந்த மிலாது நபி விழாவில்தான் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும் முதன்முதலாகச் சந்தித்தார்கள் என்பதே இந்த உறவின் புனிதத்திற்குச் சான்று. 1967-ல் ஆட்சி மாற்றத்திற்கு வித்திட்ட கண்ணியத்திற்குரிய காயிதே



மில்லத் அவர்களது கரங்களை இறுகப் பற்றிக் கொண்ட திராவிட இயக்கம், அன்று முதல் இன்று வரை சிறுபான்மையினரின் உரிமைக் குரலாகவே ஒலிக்கிறது.

**முத்தமிழ் அறிஞர் கலைஞர்:**
**இஸ்லாமியர் வாழ்வில் ஏற்றிய ஒளிவிளக்கு!**

நமது நெஞ்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர் கலைஞர் அவர்கள், இஸ்லாமியப் பெருமக்களுக்காகச் செய்த சாதனைகளை ஒரு சில பக்கங்களில் அடக்கிவிட முடியாது. அவர் செய்த புரட்சிகரமான திட்டங்களில் சில:

- **3.5% உள் ஒதுக்கீடு:** இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், இஸ்லாமியப் பெருமக்களுக்குக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் 3.5 விழுக்காடு உள் ஒதுக்கீட்டை வழங்கி, அவர்களின் சமூக மேம்பாட்டிற்கு அடித்தளமிட்டவர் கலைஞர்.
- **மிலாது நபி விடுமுறை:** நபிகள் நாயகத்தின் பிறந்தநாளுக்கு அரசு விடுமுறை அறிவித்தவர் கலைஞர். அ.தி.மு.க. அரசு அதை ரத்து செய்தபோதும், மீண்டும் ஆட்சிக்கு வந்து அந்த விடுமுறையை நிலைநாட்டியவர் அவரே.
- **உருது பேசும் முஸ்லிம்கள்:** மொழிவாரிச் சிறுபான்மையினராக இருந்த உருது பேசும் முஸ்லிம்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து சலுகைகள் கிடைக்கச் செய்தவர்.
- **காயிதே மில்லத் மணிமண்டபம்:** டெல்லி ஜமா மஸ்ஜித் பாணியில் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டியதும், அரசு கல்லூரிகளுக்கு அவர் பெயரைச் சூட்டியதும் கலைஞரின் நன்றியுணர்வு.
- **வக்ஃப் வாரிய மேம்பாடு:** வக்ஃப் சொத்துகளைப் பாதுகாக்கவும், தர்காக்களின் பராமரிப்பிற்கும் நிதி ஒதுக்கீடு செய்ததோடு, உலமாக்களுக்கு நலவாரியம் அமைத்த முதல் அரசு கலைஞரின் அரசுதான்.

**முதல்வர் மு.க. ஸ்டாலின்:**
**இஸ்லாமியர்களின் காவல் தெய்வம்!**

தலைவர் கலைஞர் அவர்கள், இஸ்லாமியர்கள் வேறு, தான் வேறு என்று, ஒருபோதும் நினைத்தது கிடையாது! அதனால்தான், இஸ்லாமிய சமூகத்தினர் நன்றி தெரிவிக்கும் விழா நடத்தியபோது, “எனக்கு நன்றி சொல்லி, உங்களிடம் இருந்து என்னைப் பிரித்துவிடாதீர்கள்” என்று சொன்னார்.

கலைஞர் சொன்ன அதே உணர்வோடுதான் - அதே வழித்தடத்தில்தான், இன்று பன்மடங்கு வீச்சோடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வருகிறார். கும்பகோணம் மஹல்லா ஜமாஅத் மாநாட்டில் அவர் வெளியிட்ட அறிவிப்புகள், இஸ்லாமியச் சமூகத்தின் மீதான அவரது அக்கறையை மெய்ப்பிக்கின்றன. அதுபோல் முதல்வர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு,

1. **கல்வி மற்றும் பொருளாதார மேம்பாடு:** மத்திய பா.ஜ.க. அரசு சிறுபான்மையின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையைத் தட்டிப்பறித்தபோது, “அவர்கள் நிறுத்தினால் என்ன? நான் தருகிறேன்” என்று ஒரு லட்சத்து ஓராயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு தலா 1,000 ரூபாய் வழங்கியவர் நமது முதல்வர். இது வெறும் பணம் அல்ல; சிறுபான்மைப் பெண்களின் கல்வி கனவை நனவாக்கும் உறுதி!

2. **புனித ஹஜ் பயண மானியம்:** ஹஜ் பயணத்திற்கான நிர்வாக மானியத்தை 80 லட்சம் ரூபாயாக உயர்த்தி,

சென்னை விமான நிலையம் அருகில்39 கோடியே 20 லட்சம்மதிப்பில்ஹஜ் இல்லம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியவர் நமது முதல்வர்.

கடந்த நான்கு ஆண்டுகளில் 24 கோடியே 56 லட்ச ரூபாய் மானியமாக வழங்கி, தமிழ்நாட்டில் இருந்து 11 ஆயிரத்து 364 ஹஜ் பயனாளிகள் புனிதப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றியஅரசு சிறுபான்மையின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையை நிறுத்தியபோது, **“என் வீட்டுப் பிள்ளைகள் படிப்பைக் கைவிடக்கூடாது**” என்று ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவிகளுக்கு மாநில அரசின் நிதியிலிருந்து ஒரு லட்சத்து ஆயிரத்து 159 முஸ்லிம் மாணவிகளுக்கு, ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகையைவழங்கியவர் நமது முதல்வர்.



**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர்,
திருவள்ளூர் மத்திய
மாவட்ட தி.மு.க.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், 31 ஆயிரத்து 625 பயனாளிகளுக்கு, 207 கோடி ரூபாய் மதிப்பிலான கடன்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு வக்பு வாரியத்துக்கான நிர்வாக மானியம் 2 கோடியே 50. லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 4 வக்பு சரக அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

வக்பு சொத்துகளைப் பாதுகாக்க, சொத்துக்களை அளவை செய்ய 2 கோடி நிதி ஒதுக்கீடுசெய்யபட்டுள்ளது.

தொன்மையான பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களைப் புனரமைக்கும் பணிகளுக்காக இதுவரைக்கும் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 10 தர்காக்கள் மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

உலமா ஓய்வூதியதாரர் இறந்த பிறகு, அவரின் குடும்பத்தினருக்கு “குடும்ப ஓய்வூதியம்” வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

முஸ்லிம் மாணவர்கள் வெளிநாடு சென்று கல்வி பயில வருடத்திற்கு 10மாணவர்களுக்கு தலா 36 லட்சம் உதவித்தொகை.

நாகூர் தர்கா மேம்பாட்டிற்கு 2 கோடி ரூபாய்,

நாகூர் சந்தனக்கூடு கந்தூரி திருவிழாவிற்கு வருடம் தோறும் 45 கிலோ சந்தன கட்டைகள் இலவசமாக வழங்கி வருவது,

மாவட்ட அரசு காஜிகளுக்கு உதவி தொகை,

காயிதே மில்லத் பெயரில் 100 கோடி ரூபாயில் திருநெல்வேலியில் பிரமாண்ட நூலகம் அமைக்க அடிக்கல் நாட்டபட்டுள்ளது.

**இஸ்லாமியர் நலனில் என்றும்**
**திராவிட முன்னேற்றக் கழகம்**

இஸ்லாமியர்களுக்குஇடர் வருகிறதென்றால், அவர்களுக்குத்துணை நிற்கிறமுதல் அரசியல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான்என்றுமுதலமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

**வக்புசட்டத் திருத்தம்** (2025)

வக்புசட்டத் திருத்தம் (2025) என்பது”கொடூரமான சட்டம்”மற்றும்”அரசியலமைப்பின் மீதான அடிப்படைத் தாக்குதல்”என்றும், . வக்பு திருத்தச் சட்டத்தைத்திரும்பப்பெறவேண்டும்என்று வலியுறுத்திசட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது.

**குடியுரிமை திருத்த சட்டம்:**

குடியுரிமை திருத்தசட்டத்தை ரத்து செய்வதற்குச் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்ததுதி.மு.க.அரசு, C.A.A.க்கு எதிராகஇரண்டு கோடி பேரிடம் கையெழுத்து வாங்கிகுடியரசுத்தலைவருக்கு அனுப்பியது

காஷ்மீர் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்யும் தீர்மானத்தை எதிர்த்தது .

**பொது சிவில் சட்டத்தை எதிர்த்து திமுக.**

இன்று இந்தியாவில் உணவு அரசியல் மூலமாகவும், கும்பல் வன்முறைகள் மூலமாகவும் சிறுபான்மையினர் அச்சுறுத்தப்படும் நிலையில், தமிழ்நாடு மட்டும் அமைதிப் பூங்காவாக இருப்பதற்குக் காரணம் நமது முதல்வரின் இரும்புக்கரம் கொண்ட நிர்வாகம்தான்.

சமூக நீதி, மதச்சார்பின்மை என்ற திராவிடக் கொள்கைகளின் வழி நின்று, இஸ்லாமியர்களைத் தனது உடன்பிறப்புகளாகக் கருதிப் பாதுகாக்கும் ஒரே தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மட்டும்தான்.

**துரோக வரலாற்றின் முகமூடியைக்**
**கிழித்தெறிந்த முதல்வர்!**

அ.தி.மு.க. மற்றும் அதன் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், பா.ஜ.க.வின் நிழலாக நின்று இஸ்லாமியச் சமூகத்திற்கு இழைத்த துரோகங்களை முதல்வர் அவர்கள் மிகத் துல்லியமாகப் பட்டியலிட்டுள்ளார்.

- C.A.A. **சட்டம்:** மாநிலங்களவையில் அ.தி.மு.க. ஆதரவு அளிக்காமல் இருந்திருந்தால் அந்தச் சட்டம் நிறைவேறியிருக்காது. அன்று ஆதரவு அளித்துவிட்டு, இன்று நீலிக் கண்ணீர் வடிப்பவர்களின் முகத்திரையை முதல்வர் கிழித்துள்ளார்.
- **வக்பு சட்டத் திருத்தம்:** நாடாளுமன்றத்தில் கருப்பு பேட்ஜ் அணியக்கூடத் துணிவில்லாமல் ஓடி ஒளிந்த அ.தி.மு.க.வின் இரட்டை வேடத்தை நாடு அறியும்.

இதற்கு நேர்மாறாக, **“தமிழ் மண்ணில் சி.ஏ.ஏ.வை அமல்படுத்த விடமாட்டேன்”** என்று சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, டெல்லிக்கு அஞ்சாமல் நெஞ்சுறுதியோடு நிற்கும் சிங்கத்தமிழன் நமது முதல்வர்!

என்னுடைய தொகுதியான ஆவடி முதல் தமிழகத்தின் கடைக்கோடி கிராமம் வரை வாழும் இஸ்லாமிய மக்கள் இன்று மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் இஸ்லாமியச் சமூகத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டிருப்போம்.

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில், ‘யார் நமக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவார்கள்?’ என்ற கேள்விக்கு ஒரே பதில் ‘**தலைவர் ஸ்டாலின்**’ என்பதுதான். தமிழகத்தின் வளர்ச்சியைச் சீர்குலைக்க நினைக்கும் மதவாத சக்திகளுக்கும், அவர்களின் அடிமைகளுக்கும் பாடம் புகட்ட இஸ்லாமியப் பெருமக்கள் தயாராகிவிட்டனர்.

இஸ்லாமியச் சமூகத்தின் பாதுகாவலராக, வழிகாட்டியாகத் திகழும் முதலமைச்சர் அவர்களுக்கு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராகவும், உங்களில் ஒருவனாகவும் எனது மனமார்ந்த நன்றிகளை மீண்டும் ஒருமுறை சமர்ப்பிக்கிறேன்.

**வெல்வோம் ஒன்றாக!**
**காப்போம் தமிழகத்தை!**



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரணிபுத்தூர் ஊராட்சி தி.மு.க சார்பில் சின்னப்பணிச்சேரி பகுதியில் ஊராட்சி மன்றத் தலைவர் கௌரி தாமோதரன் தலைமையிலும், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் ஏற்பாட்டிலும் நடைபெற்ற திராவிட பொங்கல் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு கோலப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் 2,000 பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கி உரையாற்றினார். அருகில் ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ஒன்றிய குழு உறுப்பினர் பாண்டியன், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் சந்தானம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# தமிழ்நாட்டை PNG கட்டமைப்பில் இணைக்கப்போவது எப்போது?


## ஒன்றிய அரசுக்கு – கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஜன.30-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சருக்கு திமுக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், சில கேள்விகளை எழுப்பினார். அப்போது, கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நகர்ப்புற எரிவாயு விநியோகத் திட்டத்தின் நிலை, வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகளின் விவரங்கள் என்ன? என்றும் தமிழ்நாட்டை தேசிய எரிவாயு கட்டமைப்பில் முழுமையாக இணைப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்பது உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை எழுப்பினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

தமிழ்நாடு, தற்போது தேசிய எரிவாயு கட்டமைப்பில் (National Gas Grid) இணைக்கப்பட்டுள்ளதா?



மேலும், மாநிலத்தில் நகர்ப்புற எரிவாயு விநியோக திட்டத்தின் (CGD) விரிவாக்கம் இன்னும் செலவு மிகுந்த திரவ இயற்கை எரிவாயு (LNG) அல்லது எல்.சி.என்.ஜி (LCNG) முறைகளையே சார்ந்துள்ளதா? இது குறித்த விரிவான விவரங்கள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நகர்ப்புற எரிவாயு விநியோகத் திட்டத்தின் நிலை என்ன? இத்திட்டத்தின் மூலம் எத்தனை வீடுகளுக்கு குழாய் வழி எரிவாயு (PNG) இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது, செயல்பாட்டிற்கு வந்த சிஎன்ஜி (CNG) நிலையங்கள் எத்தனை, எவ்வளவு தூரம் குழாய் வழித்தடங்கள் பதிக்கப்பட்டுள்ளன? மேலும் இத்திட்டத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மற்றும் எட்டப்பட்ட சாதனைகள் குறித்த புள்ளி விவரங்களை மாவட்ட வாரியாக தெரியப்படுத்தவும்?

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்தின் (PNGRB) ‘தேசிய இயக்கம் 2.0’ (National Drive 2.0) திட்டத்தில், தேசிய எரிவாயு கட்டமைப்பில் இணையாமல் இருக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு ஏதேனும் முன்னுரிமை அடிப்படையிலான ஆதரவு, மற்றும் ‘ திட்ட சாத்தியக்கூறு நிதியுதவி’ (Viability Gap Funding) அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் இணைப்பை உறுதி செய்யும் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதா? அவ்வாறெனில் அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டை தேசிய எரிவாயு கட்டமைப்பில் முழுமையாக இணைப்பதற்கும், அதன் மூலம் நுகர்வோருக்கு “ஒரே நாடு, ஒரே கட்டமைப்பு, ஒரே கட்டணம்” (One Nation, One Grid, One Tariff) என்ற திட்டத்தின் முழுப் பலன்களும் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் காலவரையறைக்குட்பட்ட ஒரு செயல் திட்டத்தை வெளியிட ஒன்றிய அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் நகர்ப்புற எரிவாயு விநியோக விரிவாக்கப் பணிகளில், விலை நிர்ணயத்தில் உள்ள வெளிப்படைத்தன்மையின்மையைக் கட்டுப்படுத்தவும், கடுமையான பாதுகாப்பு விதிமுறைகளை நடைமுறைப்படுத்தவும், நுகர்வோர் நலனைப் பாதுகாக்கவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.